39

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1352/21 - 2004 අගෝස්තු 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2004.08.05
1352/21 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ. - 21/78.

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 23 (2) ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2004, யூலை 16.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம், 2004 ஆம் அண்டின் 01 ஆம் இலக்க, இலங்கைத் திறந்த பல்கலைக்கழக (திருத்தம்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2003, பெப்புருவரி 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டு சனவரி 5 ஆம் தேதிய 591/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச் சட்டம், அக்கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :-

"(1) திறந்த பல்கலைக்கழகம் பின்வரும் பீடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) மானிடவியல் சமூக விஞ்ஞான பீடம் ;

(ஆ) இயற்கை விஞ்ஞான பீடம் ;

(இ) பொறியியல் நுட்பவியல் பீடம் ; அத்துடன்

(ஈ) கல்விப் பீடம்." ;

(2) அப்பந்தியின் (2) ஆம் உட்பந்தியின் (1) ஆம் விடயத்தை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) அப்பந்தியின் (5) ஆம் (6) ஆம் (7) ஆம் உட்பந்திகளை முறையே (6) ஆம் (7) ஆம் (8) ஆம் உட்பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(4) அப்பந்தியின் (5) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன் மூலம்

"(5) கல்விப் பீடம் பின்வரும் கற்கைப் பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) கல்வி

(ii) ஆரம்பப்பருவக் குழந்தைக் கல்வி ; அத்துடன்

(iii) விசேட கல்வி.".

8-973

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.